TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XI.] **AUGUST, 1911-ஞூ ஆகஸ்ற்றுமீ.** [இலக்கம் 3.

குதிரைக்காக ஓர் மனு.

மனிதனுக்கு உபயோகமுள்ள மிருகங்களிலெல்லாம் சிரேஷ்டமானது குதிரை. அது வண்டியிழுப்பது முதலிய அவசியமான காரியங்களுக் குதவுவதேயல்லாமல் மனிதர்க்கு மகிழ்ச்சியை யுண்டுபண்ணுகிற பந்தாட்டம் பந்தயமோடல் முதலிய விளையாட்டுகளிலும் மனிதர்க்குச் சககாரியாயிருக்கிறது. இவைகளைவிடக் கண்ணியமான தொழிலைச் செய்கிறவை இராணுவக் குதிரைகள். அவைகளை யவைகளின்மீதேறி யுத்தஞ் செய்கிற போர்வீரர்களுக்குச் சமானமாக வுரைக்கவேண்டும். மனிதர்க்குச் சமானமான புத்திக் கூர்மையும் நற்குணமும் வாய்ந்திருக்கிற இந்தப் பிராணியை நாம் பட்சமுடன் நடத்துவதே யதற்குச் செய்யக்கூடிய கைம்மாறு.

குதிரைகளுக்கும் மனிதரைப்போலவே தேக அசௌக்கிய முண்டாவது சகஜந்தான். இதை யறியாமற் சில மூட வண்டிக்காரர்கள் குதிரை சிறிது மெதுவாயோட வாரம்பித்தா லதை யுடனே சவுக்கினா லடிக்கிறார்கள். அதன் கால் சுளுக்கிக்கொண்டிருக்கும்போதும், நன்றா யடிக்கப்படாத லாடத்தினால் கால் முடமா யிருக்கும்பொழுதும் குதிரை சாதாரணமா யோடுவதுபோல் ஓடாது. ஆகையா லப்படிப்பட்ட சமயங்களி லவைகளை யடித்துப் பின்னு மதிகமான தொந்தரவு செய்யக்கூடாது.

சில குதிரைகளை, சமபூமியிலேயே யவைகளா விழுக்க முடியாத சுமையைச் சுமத்தி, மலைப்பாங்குகளிலும் கரடுமுரடான ரஸ்தாக்களிலு மோட்டுகிறார்கள். அப்பொழுது அவை அந்தப் பாரத்தை யிழுக்க முடியாமல் நின்றுவிட்டா லவைகளை யடித்தடித் தோட்டுகிறார்கள்.

இவ்வாறு குதிரைகளை அளவுக்குமிஞ்சி வேகமாய் ஓடும்படிக்கும், இழுக்கமுடியாத பாரத்தை யிழுக்கும்படிக்கும் வருத்தப்படுத்தினால் அவைகளுக்கு இயற்கையாயுள்ள நல்ல குணம் மாறி, முரட்டுத்தனமுள்ளவையாகிவிடும்.

சில வண்டிக்காரர்களுக்கு, கடிவாளத்தை யடிக்கடி யிறுக்கி யிழுக்கிற சுபாவமுண்டு. அது குதிரைகளுக்கு வலியை யுண்டாக்குமென் றவர்க ளறிகிறதில்லை. குதிரைகளுக்குக் கடிவாளம் பூட்டுவது அவைகளைச் செலுத்துவதற்கே யல்லாமல் அவைகளைத் தண்டிப்பதற் கல்ல.

வாடகை வண்டிகளி லேறுகிறவர்கள் தாங்க ளவசரமாய்ப் போகவேண்டுமென்று வேகமாய் ஓட்டும்படி சொல்ல, வண்டிக்காரர் குதிரைகளை முதுகொடியப் புடைக்கிறார்கள். சுதாவில் வேகமாயோடாத குதிரைகளை யவ்வாறு அடிப்பதினால் அவை எவ்வள வுதூரம் வேகமாயோடப்போகின்றன. ஒரு மைல் தூரம் போவதற்குச் சாதாரணமாய்ச் செல்வதைக்காட்டிலும் இரண்டு அல்லது மூன்று நிமிஷம் முன்னதாகப் போகும். அதற்காக அந்த வாயில்லாத ஜந்துவுக் கிவ்வளவு ஹிம்சை செய்கிறார்கள். அவ்வாறு அவசரமாய்ப் போகிறவர்கள் தாமே சிறிது முன்னதாகப் புறப்பட் டிருந்தாலும் அல்லது நல்ல குதிரைபூட்டியிருக்கும்வண்டியிலேறினாலும்

இவ்வளவு துன்பத்திற் கிடமிராதல்லவா? மேலும் வாடகை வண்டிகளிலேறுகிறவர்கள் எப்பொழுதுமே இளைத்து எலும்புந் தோலுமாயிருக்கிற குதிரை வண்டிகளி லேறாமல் புஷ்டியாயிருக்கிற குதிரைகளைக் கட்டியிருக்கிற வண்டிகளி லேறினால், எல்லா வண்டிக்காரரும் அவரவர்களின் குதிரைகளை நன்றாய் வைத்திருப்பார்கள்.

சிலர் குதிரைகளினால் தாங்கள் பணஞ் சம்பாதிப்பதைக் கவனிக்கிறார்களேயொழிய அவைகளின் சௌக்கியத்தைப்பற்றிக் கவலையெடுத்துக்கொள்வதில்லை. அவைகளின் லாயங்களைச் சுத்தமாயும் ஈரமில்லாமலும் வைத்திருப்பதுடன் காற்றுவரும்படி ஜன்னல்க ளமைக்கவேண்டும்.

அவைகளின் வாயில் கட்டுகிற கொள்ளுப் பைகளை இரண்டுநாளைக் கொருமுறையாவது நன்றாய்ச் சுத்தஞ்செய்ய வேண்டும். சிலர் குதிரைகளுக்குப் புல்லை உயரத்தில் கட்டிவைத்து அங்கிருந் துண்ணும்படிச் செய்கிறார்கள். உயரத்திலிருந்து புல்லை யெடுத்துக் கொள்ளும்போது அதிலிருந்து தூசிகள் குதிரையின் கண்களில் விழும். ஆகையினால் புல்லைக் கீழேதான் போடவேண்டும். அவைகளின் படுக்கைக்காக உபயோகிக்கிற வைக்கோலை ஒருதர முபயோகித்தபிறகு மறுபடியு முபயோகிக்க வேண்டுமானால் அதை நன்றா யுதறி யசுத்தப்பட்ட பகுதியை நீக்கிவிட்டு, மிகுந்ததை யுலர்த்தி யுபயோகப்படுத்திக்கொள்ளலாம். லாயங்கள் குதிரைகள் படுத்துப் புரளுவதற்குப் போதுமானவளவு விசாலமா யிருக்கவேண்டும். ஏனென்றால், குதிரைகள் களைத்திருக்குஞ் சமயத்தில் கால்களைப் பரப்பிக்கொண்டு படுத்துக்கொள்ள விரும்பும்.

குதிரை மழையில் நனைந்துவந்தால் அதன் உடம்பை நன்றாய்த் துடைத்துப் பிறகு அதன்மேற் போர்வையைப் போடவேண்டும். நாள்தோறும் லாயத்திற்கு வந்தவுடன் அதன் கால்களைக் கழுவி லாடங்களில் சிறுகற்க ளேதேனுஞ் சிக்கிக்கொண்டிருக்கின்றனவாவென்று பார்க்கவேண்டும். இவ்வாறு குதிரைகளைப்பற்றி நாம் கவலை யெடுத்துக்கொண்டு அவைகளை நல்ல தேகஸ்திதியில் வைத்திருந்தால் அவைகளும் நமக்கு நன்றாய் வேலை செய்யும்.

கடைசியாக, ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சிறிது கூறவேண்டிய தவசியமாயிருக்கிறது. குதிரைகள் அவைகளின் கிழப்பருவத்திலும் நோயுற்ற காலத்திலும் நமக்கு உபயோகப்படாதபோது, அவை சௌக்கியமாயிருந்தபொழுது செய்த வேலைக்காக நன்றிபாராட்டி யவைகளைப் பட்சமுடன் ஆதரிப்பது நமது கடமை. அநேகர் அவ்வாறு தமக் குபயோகப்படாத குதிரைகளை யாருக்காகிலும் விற்றுவிடுவதுண்டு. அவைகளை வாங்குகிறவர்கள் தமக்கும் பிரயோசனப்படவில்லை யென்று வேறு சிலருக்கு விற்பார்கள். இப்படி யக்குதிரைகள் அவைகளின் தள்ளாதகாலத்தில் சிரமமில்லாமற் காப்பாற்றப்படாமல் இங்குமங்கு மலைக்கழிக்கப்படுகின்றன. எல்லாரு மிப்படிச் செய்வதில்லை. அநேக புத்திமான்கள் கிழக்குதிரைகளைத் தங்களிடத்திலேயே வைத்துக்கொண்டு விசுவாசத்துடன் அவைகளைக் காப்பாற்றுகிறார்கள். இப்படிப்பட்ட தயாள சிந்தையோடே யல்லவா இச்சென்னைமாநகரில் பல தர்மாத்மாக்கள் சேர்ந்து பஞ்சரப்போல் என்கிற ஆசிரியத்தை ஸ்தாபித்து அதில் வேலைசெய்ய முடியாத ஜந்துக்களை யவை சகஜமா யிறக்கும்வரையில் காப்பாற்றி வருகிறார்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

ஜந்துக்களும் அவற்றின் குட்டிகளும்.

ஜந்துக்களின் வாழ்க்கையில் பார்ப்பவர்களுடைய மனதைக் கவரத்தக்க விஷயங்களில் முக்கியமானது அவற்றின் குட்டிகளின்மே லவைகளுக்கிருக்கிற வாஞ்சையே. இந்த ஒரு குணமே பிராணிகள் மனிதனுக்குத் தாழ்ந்தவை யென்கிற வபிப்பிராயத்தைக் கொஞ்சம் குறைத்து அவைகளைப் பற்றிக் கௌரவமான அபிப்பிராயத்தைக் கொள்ளும்படி தூண்டுகிறது.

அதற்குத் திருஷ்டாந்தமாக வேறொன்றையும் போய்க் கவனிக்க வேண்டியதில்லை. சாதாரணமாய் வீடுகளில் வளர்க்கிற நாய் பூனை முதலிய பிராணிகள், அவைகளின் குட்டிகளை ஜாக்கிரதையுடன் வளர்ப்ப

தைப் பார்க்கும்பொழுது நமக்கு அவைகளி னிடத்தி லெவ்வளவு பிரியமுண்டாகிறது. கோழி முதலிய பறவைகள், அவைகளின் முட்டைகளை எவ்வளவு ஜாக்கிரதையாய் அவையங்காத்து குஞ்சுகள் பொரித்தபிற கும் அக்குஞ்சுகளை எவ்வளவு அருமை யுடன் வளர்க்கின்றன.

இந்தப் புத்திரவாஞ்சை மனிதர்களுடன் பழகுகிற பிராணிகளினிடத்தில் மாத்திரமே யன்றிக் காட்டு மிருகங்களினிடத்திலு மதிக மாயிருக்கிறது. காட்டு மிருகங்கள் எவ் வளவு கொடுந் தன்மையுள்ளனவா யிருந்த போதிலும், இதர பிராணிகளைச் சிறிதுந் தயைபில்லாமற் கொல்லுகிற சுபாவமுள்ள வையாயிருந்தபோதிலும் அவற்றின் குட்டிக ளினிடத்தில்மாத்திரம் அதிக ஆசைகொண் டுதா னிருக்கும்.

ஆப்பிரிக்கா தேசத்தில் பிரயாணஞ் செய் தவர்கள், அத்தேசத்துக் காடுகளில் யானை கள் அவைகளின் குட்டிகளுக்காக உயிரை விட்டிருப்பதாக அநேக சரித்திரங்களையெழு தியிருக்கிறார்கள். காட்டு வேடர்கள் ஒரு கும்பலாய்ச் சேர்ந்து கைகளி லீட்டிகளை யெடுத்துக்கொண்டு யானையைப் பிடிக்கப் போவார்களாம். அப்பொழுது யானை யதன் குட்டியையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு தப்பித்தோடப்பிரயத்தனப்படுமாம். ஆனால் குட்டி வேகமா யோடாதாகையால் கடைசி யில்வேடர்கள்துரத்திக்கொண்டுபோ யதைச் சுற்றி நின்று ஈட்டிகளால் குத்துவார்களாம். அப்பொழுது தாய் யானை அந்த ஆயுதங்கள் தன் குட்டியின்மேல் படாமலிருக்கும்படி அதைத் தன்னுடைய பெரிய சரீரத்தினால் மறைத்து அதைத் தன் தும்பிக்கையினால் தடவிக்கொண்டிருக்குமாம். கடைசியாக அதன்மே லெறியப்படுகிற ஈட்டிகளினா லுண்டாகிறகாயங்களினின்றும்இரத்த மதிக மாய்ப் பெருகி அது பலவீனமடைந்து கீழே விழுந் திறக்குமாம்.

மிகவும் உக்கிரமான மிருகமென்று சொல் லப்படுகிற சிங்கத்திற்கும் இந்தப் புத்திர வாஞ்சை மற்றப் பிராணிகளைவிட அதிகமாக விருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். பெண் சிங்கம் தன் குட்டிகள் ஊட்டுகிற பருவத்தில் ஆகாரந் தேடப்போகிற வேளைதவிர, மற்றப் பொழுதெல்லா மவைகளி னருகிலேயே யிரு க்குமாம். பால் மறக்கிற பருவத்தில் குட்டி களுக்கு இதர பிராணிகளைப் பாய்ந்து கொல் லக் கற்றுக்கொடுப்பது மிகவு மற்புதமா யிருக்குமாம். குட்டிகளுக்கு இரண்டு அல் லது மூன்று வயதாகி அவை தாமே நன் றாய் வேட்டையாடுமென்று தனக்கு நிச்சய மான பிறகுதான் தாய்ச்சிங்கம் அவை களைச் சுயேச்சையாய்த் திரிய விடுமாம்.

கடலில் வசிக்கிற மச்ச ராசிகளிற்கூட இந்தப் புத்திர வாஞ்சை சுபாவமாயிருக்கக் கண்டிருக்கிறார்கள். திமிங்கில வேட்டைக் காரர் திமிங்கிலத்தை எறியீட்டியினாற் குத் தும்பொழுது, அது தன் குட்டியைச் சிறகு களி னடிப்புறத்தில் மறைத்துக்கொண்டு நீருக்குள் முழுகிப் பகையாளிகளி னிடத்தி லிருந்து தப்பித்துக்கொள்ளும் பொருட்டுத் தன் புத்திக்கெட்டின வரையிற் பலவித உபாயங்களைச் செய்யுமாம். இவ்வாறே சிறு கிருமி முதல் யானை, திமிங்கிலம் முதலிய பெரிய மிருகங்க ளீறாகவுள்ள சகல ஜீவ ராசிகளுக்கும் அவ்வவைகளின் சந்ததிகளி னிடத்தில் அன்பு பொருந்தியிருக்கிறது.

இது இப்படியிருக்க, சில பிராணிகள் தம் மிலும் வேறுபட்டு இதரபிராணிகளின் குட் டிகளையும் அவைகளின் குட்டிகளைப்போல வே அன்புடன் வளர்ப்பதுண்டு. கொஞ்ச காலத்திற்குமுன் ஒரு துரைமகனுடைய கோழி, குஞ்சுகளைப் பொரித்தவுடன் மாண்டு விடவே, அப்பொழுது அதே வீட்டில் வளர்ந்துவந்த பூனை யொன்று அக்குஞ்சு களுக்குக் குளிருண்டாகாம லிருக்கும்படி யவைகளைத் தன் மார்பிலணைத்து வைத்துக் கொண்டிருந்து அவைகளைக் காத்ததாம்.

தென்னிங்கிலாந்தில் ஒரு குடியானவனு டைய பெட்டைக்கோழிகளி லொன்று அடிக் கடி யதன் முட்டைகளை வைத்து விட்டுப் போய் வெகுநேரம்வரையில் சுற்றித் திரிந்து கொண்டிருந்ததாம். அந்தக் குடியானவன் அந்த முட்டைகள் குளிர்ந்துபோய்க் குஞ்சு கள் வெளிப்படாமற் போகுமென்று பயந்து அந்த முட்டைகளுக்குச் சூடு தாக்கும்படி யவைகளைக் கொண்டுபோ யொரு அடுப்பி னருகில் வைக்க, அதைப் பார்த்துக்கொண் டிருந்த அக்குடியானவனுடைய பிரின்செஸ் (Princess) என்னும் நாய், அங்கு சென்று அந்த முட்டைகளின்மேல் ஜாக்கிரதையா யுட்கார்ந்து அந்தப் பெட்டைக்கோழி திரு ம்பி வருகிறவரையில் அவையங் காத்துக்

கொண் டிருந்ததாம். அதேமாதிரி நாள் தோறும் அந்தக் கோழி வெளியே செல்லும் போதெல்லாம் அந்த நாய் முட்டைகளை யவையங் காத்துவந்து குஞ்சு பொரித்தபிறகு அக்குஞ்சுகளை அதிக அன்புடன் பாதுகாத்து வந்ததாம்.

மிருகங்களுக்கு அவைகளின் குட்டிக ளின்மே லுள்ள பிரீதியைக்குறித்து ஒரு துரைமகன் தம்முடைய கண்களாற் கண்ட ஒரு காட்சியை யவர் எழுதியபடி எடுத் துரைப்போம்:—

“வெள்ளை முயல் மிகவும் அச்சமுள்ள பிராணியென்றும்வேடர் கையிலகப்பட்டால் தப்பித்துக்கொண்டோட யத்தனிப்பதே யில்லையென்றும் எல்லாருக்கும் தெரியும். ஆனால் ஒரு சமயத்தில் ஒரு முயல் அதன் குட்டிகளை யபாயத்தினின்றுங் காப்பாற்றும் பொருட்டுச் செய்த தைரியமான செய்கை எனக்கு அதிக வியப்பாயிருந்தது. நான் பதினாறு வயதுள்ள வாலிபனா யிருந்தபொ ழுது ஒருநாள் எங்களுடைய வயல்களின் பக்கமாய்ப் போய்க்கொண்டிருந்தேன். அங் கோர் மூலையில் ஒரு முயல் அதனுடைய வளைக்கருகில் அதிக ஆவேசத்துடன் குதித் துக்கொண்டிருந்தது. அது ஏன் அவ்வாறு குதிக்கிறதென் றறியும்பொருட்டு அருகிற் சென்று பார்க்கையி லது அங்கேயிருந்த ஒரு சர்ப்பத்தின்மேல்வரவர அதிகக் கோபத் துடன் பாய்ந்துகொண் டிருந்தது. அது அவ்வாறு குதிக்கும்போது அந்த சர்ப்பமும் அதைக் கடித்துக்கொண் டிருந்தது. கடை சியில் சர்ப்பத்தின் விஷக்கடியினாலந்த முயல் கீழே விழுந்துவிட்டது. சர்ப்பமு முடனே ஓடிப்போய்விட்டது. பிறகு நான் வளை யண்டை போய்ப் பார்க்க, அதில் உயிரோடு மூன்று முயற்குட்டிகளும்ஒருகுட்டி இறந்து மிருக்கப் பார்த்தேன். அவைகளின் தாய் அவைகளை யந்த சர்ப்பம் கொல்லத் தொடங் குவதைக் கண்டு அதிக கோபமூண்டு தனக்கு வரு மபாயத்தையுங் கவனிக்காமல் அதன் மேல் குதித்து அதை யெதிர்த்தது. சர்ப்பத் தின் விஷங் கொடூரமானதென்று எல்லா மிரு கங்களுக்கு மியற்கையாகவே தெரியுமாகை யால் அந்த முயல் தனக்கு சர்ப்பத்தின் கடியினால் மாணமுண்டாகுமென்று உண ராம லிருந்திருக்கக்கூடுமென் றெண்ணுவதற் கிடமில்லை. ஆதலால் அந்த முயல் தன் குட்டிகளைக் காப்பாற்றும்பொருட்டுத் தன் னுயிரை யிழக்கத் துணிந்த தென்பதற்குச் சந்தேகமே யில்லை.”

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட வாயில்லா ஜந்துக்களினிடத்திலும்கூட ஆத்ம பரித்தி யாகமென்கிற உயர்ந்த குணமிருப்பதைப் பார்க்கும்பொழுது அவைகளினிடத்தில் மானிடர் இரக்கமும் அன்பும் பாராட்ட வேண்டிய தவசியமல்லவா?

> “அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
> அன்பே சிவமாவ தாரு மறிகிலார்.”

மிருகங்களுக்கு நித்திரை வேண்டுமா?

நித்திரை மனிதனுக்கேயன்றி மற்றெல் லா ஜீவராசிகளுக்கும் இளைப்பாறுதலையும் இன்பத்தையும் தரத்தக்க ஜீவாதாரமென லாம். நாம் வேலை செய்யும்பொழுது நமது சரீரத்திலுள்ள மாம்சாம்சங்கள் தேய்ந்து போகின்றன. நித்திரைகாலத்தில் இரத்த மானது தேகத்திலுள்ள யந்திரங்கள் ஒவ் வொன்றினுள்ளும் சென்று, அங்குள்ள கெட் டுப்போன மாம்சாம்சங்களாகிய அழுக்கு களைத் திரட்டிக்கொண்டு அவற்றிற்குப் பதி லாக நாம் சாப்பிடும் அன்னபானாதிகளி லுள்ள சத்துக்களைக் கொடுத்துச் சரீரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் வளரச் செய்கின் றது. இவ்விதமாய்க் குடைநிழலிலிருந்து குஞ்சர மூரும் முடிமன்னர்முதல் ஏழைக ளீறு யுள்ளோருக்கும், மற்று ஜீவான்மாக்கட் கும் நித்திரை இன்றியமையாதது. காட்டில் சஞ்சரிக்கும் விலங்குகள், ஆகாயத்தில் பறக் கும் பறவைகள், நீரில் வாழும் ஜந்துக் கள் முதலிய சகல ஜீவராசிகளுக்கும், தா வரசங்கமங்களுக்கும் நித்திரையே ஜீவாதார மெனலாம். சர்வ ஜீவதயாபரக் கடவுள் நித்திரையை நோயற்றோர் நோயுற்றோர், சிறி யோர் பெரியோர், வலியோர் மெலியோர் முதலிய சகல மனுஷருக்கும் சர்வ ஜீவகோ டிகளுக்கும் பரம ஔஷதமாக அளித்திருக் கின்றனர். கஷ்டமான வேலையினாலும், சரீர மனோமுயற்சிகளினாலும் உண்டாகக்கூடிய களைப்பு, ஆயாசம், வருத்தம் முதலிய சகல கஷ்டங்களும் நித்திரையால் நீங்கிவிடவே, திரும்பவும் புதுப் பலனும் ஊக்கமு முண் டாகி வேலைசெய்யத் திறமையுண்டாகின்றன.

நித்திரையின்மையால் அசமந்தம், சோம்பல், தலைவலி, காய்ச்சல், இருமல் முதலிய பல ரோகங்க ளுண்டாவதுடன், மூளை பலவீனமாகி வெறிமயக்கமும் பயித்தியமும் உண்டாகின்றன. சில ஜந்துக்களை நித்திரைக் கிடங்கொடாமல் வைத்திருப்போமாயின், அவை மாண்டு மடிந்துபோகும்.

ஆதலால், நமக்குக் கீழ்ப்படிந்து நம்மால் சம்ரக்ஷிக்கப்படுகிற எல்லா ஜீவராசிகளிடத்திலும் நாம் மிகுந்த கருணையுட னிருந்து அவைகளுக்குப் போதுமான நித்திரைக்குச் சாவகாசம் கொடுப்பது நம்முடைய கடமையாகும். தவிர, பெரியோராயினும் சிறியோராயினும் ஜந்துக்கள் நித்திரை செய்யும்போது அவைகளைத் திடீரென எழுப்பிவிடுதலும், போதுமான நித்திரைக் கிடங்கொடாமல் அவைகளினிடம் வேலை வாங்குவதும் கொடிய பாவமாகும்.

"விசனமுண்டாக்கும் ஒன்றையும் செய்யாதே."

ஒருநாள் உல்லி என்னும் ஒரு சிறு பையன் தன் தாயின் வியாதிப்படுக்கையோரமாய் உட்கார்ந்து, அவள் படும் வருத்தத்தைப் பார்த்துப் பரிதபித்துக்கொண் டிருந்தான். அந்நேரம் பொழுது விடிந்து வெயில் வீட்டிற்குள் விழுந்தது. உல்லியினுடைய அழகான கின்னரக் குருவி மிகவும் இனிய தொனியுடன் பாடிக்கொண் டிருந்தது. அப்போது மகன் தாயைப் பார்த்து, "அம்மா என் குருவி பாடுகிறதைக் கேட்கிறது உங்களுக்குப் பிரியமா? அது மிகவும் இனிமையாய்ப் பாடுகிறது அல்லவா?" என்று கேட்டான். அதற்கு அவள், "சூரியன் உதிக்கிறதைப் பார்த்து, அது சந்தோஷித்துப் பாடுகிறதைக் கேட்கிறது மிகவும் இன்பந்தான். ஆனால் அதன் இராகத்தைக் கேட்டு மகிழக்கூடாதபடி நான் மிகவும் வியாதியாயிருக்கிறேன். மேலும், அதன் சந்தோஷத்துடன், தன்னை நீ நிர்ப்பந்தப்படுத்தி வைத்திருக்கிறாயென்னும் துயரத்தையும் காட்டுகிறவண்ணமாய் அக்குருவி பாடுகிறது. ஆதலால் அதன் சத்தம் என் தலைநோயை அதிகரிக்கப் பண்ணுகிறது" என்றாள். இதற்குச் சில மணிநேரங்கள் கழித்து, உல்லி தன் படுக்கை அறைக்குட் போய், தாயை முத்தமிட்டு, "அம்மா, என் குருவி இனிமேல் உங்களை வருத்தப்படுத்தாது. நான் அதைத் தன்னிஷ்டம் போல் திரிய விட்டுவிட்டேன்" என்று சொன்னான். தாய் அவனைப் பார்த்து, "அப்பா, நீ அதை மிகுந்த கனிவுடன் நேசித்தாயே, அதை விட்டுவிட எப்படித்தான் உனக்கு மனம் வந்தது" என்று கேட்டாள். அதற்கு அவன், "மெய்தான் அம்மா, நான் அந்தக் குருவியை மிகவும் நேசித்தேன். ஆனால் உங்களையோ அதைப்பார்க்கிலும் அதிகமாய் நேசிக்கிறேன். உங்களுக்கு நோயைக் கொடுக்கும் ஒன்று எனக்கு எவ்வளவு அருமையா யிருந்தபோதிலும், அதை நான் வைத்து வளர்க்கத் தலைப்படமாட்டேன். மேலும் அப்படி வைத்து வளர்ப்பதனால், அதற்குத் துக்கமென்று தாங்கள் சொல்வதையும் நம்புகிறேன்" என்றான். உள்ளான மெய்யன்புக்கு, ஆ! இது எவ்வளவோ நேர்த்தியான திருஷ்டாந்தம். உல்லி என்பவன் தன் தாயை மிகவும் நேசித்ததால், தன் தாய்க்கு நோயுண்டாக்கின காரியத்தைச் செய்யவாவது, அவள் சொல்லுக்கு விரோதமாய்க் குருவியை வளர்க்கவாவது அவனுக்குச் சற்றாகிலும் மனம் கொள்ளவில்லை. அவன் பாராட்டின அன்பல்லவா மெய்யான கிரியை அன்பு.

தாவரங்களால் உண்டாகும் நன்மைகள்.

நாம் வெயிலிற் சென்று திரிந்து வரும்போது நிழலில் தங்கி இளைப்பாற விரும்புகின்றோம். அதிலும் இலை தழைந்த மா நிழலைக் கண்டால் பேரானந்தம் அடைகின்றோம். இதனாலே "நிழலருமை வெயிலிற் றெரியும்" என்னும் வாக்கியமும் வழங்குகின்றது. அநேக தருக்கள், மனிதர் பட்சி முதலிய ஜீவப்பிராணிகளுக்கு மாதுரியமான கனிகளைத் தருகின்றன. பறவைகள் மாக்கிளைகளில் கூடுகட்டி இன்பமாய் வசிக்கின்றன. மிருகங்களும் இலை தளிர்களை மேய்ந்து மரத்தடியிற் றங்கி இளைப்பாறுகின்றன. இவையேயன்றி, தாவரங்களால் ஜீவப்பிராணிகளுக்கு உண்டாகும் நன்மையும் உண்டு; அது பிராணாதாரமான நன்றியாகும். அதை விவரிப்போம்.

ஜீவப்பிராணிகளுக்கெல்லாம் பிராணதார மானது ஆகாயம். இந்தச் சுத்த ஆகாயம் ஜீவஜந்துக்கள் மூச்சு விடுவதினாலும், நெருப்பு எரிவதினாலும், பதார்த்தங்கள் அழுகிப் பதங் கெடுவதினாலும் விஷமுள்ளதாக மாறுகின்றது. உலகமெங்கும் வியாபித்திருக்கும் சுத்த ஆகாயம் இவ்வாறு விஷமுள்ளதாக மாறிவிட்டால் அதை உட்கொள்ளும் பிராணிகள் எல்லாம் நாளடைவில் இறந்துவிட நேரிடும். அவ்வாறு ஆகாயம் கெடாதபடி செய்து தாவரங்கள் நமக்கு நன்மை புரிகின்றன. அதெப்படியெனில்:—

ஜீவப்பிராணிகள் உயிர் வாழ்வதற்குச் சுத்த ஆகாயம் அவசியமாவதுபோல மரம், புல், பூண்டு முதலிய தாவரங்கள் விருத்தியாவதற்கு அசுத்த ஆகாயம் அவசியம். பயிர் பச்சைகள் செழித்து வளர எருப்போடுவதே இதற்குத் திருஷ்டாந்தமாகும். நாம் இடும் எருவிலுண்டாகும் அசுத்த வாயுவைத் தாவரங்கள் உட்கொண்டு ஓங்கி வளர்கின்றன. அதுபோலவே ஆகாயத்தோடு கலந்துள்ள விஷவாயுவைத் தாவரங்கள் சூரியனுதவியினால் வேறு பிரித்து அதையே தமக்கு உணவாக்கிக்கொண்டு சுத்தாகாயத்தை மாத்திரம் வெளியிடுகின்றன. இனி யிதைத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுவோம்.

ஒரு வாயகன்ற பாத்திரத்தில் முக்காற் பங்கு ஊற்றுத் தண்ணீர் விடு. அதற்குள் ஜலத்தில் பயிராகும் நீர்ப்பூண்டு ஒன்றை வை. பிறகு அப்பாத்திரத்தில் ஒரு மச்சத்தை விட்டு உள்ளே சிறிதும் காற்று நுழையாதபடி இறுக மூடிவிட்டுப் பார். எத்தனை நாளாயினும் அந்த மச்சம் உயிரோடு ஜீவித்திருக்கும். எப்படியெனில், மச்சம் சுவாசம் விடுவதனால் அப்பாத்திரத்திற் குள்ளிருக்கும் ஆகாயம் முழுவதும் விஷமுள்ளதாகும். ஆனால் அதிலுள்ள செடி விஷவாயுவைக் கிரகித்துக்கொண்டு சுத்த ஆகாயத்தை வெளியிடும். இவ்வாறே மாறி மாறி ஒன்றுக்கொன்று உதவிபுரிந்துகொள்ளும். மச்சத்திற்கு ஆகாரமாத்திரம் அப்போதைக் கப்போது போடவேண்டும். இரவில் சூரிய உஷ்ண மில்லாமையினால் தாவரங்களும் மனிதரைப்போலவே பிராணவாயுவை உட்கொண்டு அசுத்த வாயுவை வெளியிடும்.

பிள்ளைகளே! மனிதர் முதலிய ஜீவப்பிராணிகளுக்குத் தாவர வஸ்துக்கள் இவ்வித அரிய நன்மை செய்வது எவ்வளவு ஆச்சரியம்! இப்படிப்பட்ட பேருதவியை ஜீவாகிகளுக்காக ஏற்படுத்திய கடவுளை நாம் என்றும் மறவாமல் வணங்கவேண்டுவது அவசியமல்லவா?

பிராணிகளிடத்தில் ஹாகர் துரைக்குள்ள அன்பு.

இங்கிலாந்து தேசத்தில் காரன்வால் என்னும் மாகாணத்தில் மார்வென்ஸ்டோ வென்னுமூரில் பாதிரியாயிருந்த ராபர்ட் ஸ்டீபென் ஹாகர் துரையவர்கள் வாயில்லாப் பிராணிகளிடத்தில் அதிக நேசமுடையவரா யிருந்தாராம். அவருடைய வீட்டி லநேக பூனைகளும் நாய்களும் வளர்ந்துவந்தனவாம். அவர் கோவிலுக்குச் செல்லும்பொழுது அவைகளுமவருடன் கூடவே சென்று அவருடைய பிரசங்கங்களின் பொருளை யுணர்வதுபோலவே அவைகளை யுற்றுக் கேட்டுக்கொண்டிருக்குமாம். பூனைகளும் நாய்களும் கோவிலுக்கு வருகிற மனிதர்களுக்கு யாதொரு இடையூறு யில்லாமலிருந்தால் அவைகளுக்கும் கோவிலுக்குச் செல்கிற பாத்தியதையேன் கொடுக்கக்கூடாதென்று ஹாகர் துரை சொல்வாராம். அவர் பல பறவைகளையும் வளர்த்துவந்து அவைகளி லொவ்வொன்றிற்கும் பெயரிட்டு அப்பெயர்களைக் கொண்டழைக்க அப்பறவைகள் அவரிடத்தில் வருமாம். அப்பறவைகள் கூடுகட்டிக் கொள்வதற்குத் தம்முடைய பண்டசாலையையே திறந்துவைப்பாராம். சில பறவைகள் அவருடைய விருப்பம்போலவே பண்டசாலையிலேயே கூடு கட்டிக்கொள்ளுமாம். மற்றுஞ் சில, மற்றப் பருவங்களி லங்கில்லாவிட்டாலும் மழைக்காலத்தி லவசிய மங்கே வந்து சேருமாம்.

ஒரு சமயத்தி லப்பறவைகள் அவருடைய வயலில் பயிராயிருந்த அவரை, பயறு முதலிய தானியங்களைத் தின்றழித்துவிடவே, மறுதடவை தானியங்களை விதைத்தபோது அவருடைய வேலைக்காரன் பறவைகளை மிரட்டும்பொருட்டுச் செய்துவைக்கிற வைக்கோற் பதுமையின் தலையில் ஹாகர் துரையவர்களின் பழைய தொப்பியொன்றை மாட்டிவைத்தானாம். அதைப் பார்த் தந்தப் பறவைகள் பாதிரியென்றெண்ணி, அப்பது

மைக் கருகே சென்று அவர் எப்பொழுது மவைகளுக்குத் தானியங்களைத் தம்முடைய கையினின் றூட்டுவதுபோ லூட்டுவாரென் றெதிர்பார்த்திருந்தனவாம்.

ஹாகர் துரையவர்கள் சிருஷ்டியில் காணப் படுகிற அபூர்வமான விஷயங்களைக் கவனித்து அவைகளைப்பற்றி யாராய்ச்சி செய்து கொண்டே யிருப்பாராம். பறவைகள் பாடும் பொழுது அவருக்கு அதிக ஆனந்த முண்டாகுமாம். நிசப்தமான விடங்களை யவர் கடவுளில்லாத ஸ்தலமென்று சொல்வாராம்.

ஜீவாதார மந்திரோபதேசம்.

முப்பது நாளைக்கு காலையி லெழுந்திருந்தவுடனும் நித்திரைக்குப் போகுமுன்னும் இப்பக்கத்தைப் பல தடவை வாசித்து தியானிப்பவர்களுக்குச் சுக செல்வ பாக்கியம் பெருகும். சகல சம்பத்தும் விர்த்தியாகும்.

அன்பருளக் கோயிலிலே யமர்ந்தருளும் பதியாகிய சாக்ஷாத் ஜெகதீசனின் கிருபையால் நான் அன்பின் மயமாகி யிருக்கிறேன். தெய்வம் அன்பாகவே இருக்கிறார். அவர் என்னில். நான் அவரில். நானும் அன்பாகவே இருக்கிறேன்.

ஓ! உலகமே! உலகத்தின் மக்களே! சகல ஜீவராசிகளே! நான் என் முழு மனதோடும் உங்களை நேசிக்கிறேன். உங்களுக்குள் சகல சுகசெல்வ பாக்கியமும் சந்தோஷமும் பெருகுவதாக. நீவிர் நீடூழி வாழ்க. உங்கள் வாழ்வு என் பாக்கியம். உங்களுக்குள் சகல சந்தோஷமும், சுகமும், பலனும், காரிய சித்தியும் பெருகுவதாக.

என் ஆசையாகிய (மின்சார) சக்தியால் நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் அன்பின் அருள் தந்தி ஆசி அனுப்புகிறேன். நீங்களும் அன்புகூர்ந்து ஏற்றுக்கொண்டு நெடுநாள் வாழ்வீர்களாக.

இன்றுமுதல் நான் நீடிய சாந்தமும் தயவும் சகிப்பு முடையவனாக இருப்பேன். என் மனதில் மகிழ்ச்சியும் சந்தோஷமுமிருக்கும். என் ஆயுளும் ஓங்கி வளரும். பிறர்க்கு நன்மை செய்வதையே கடைப்பிடித் தொழுகுவேன். ஆதலால் நான் வாழ்வேன்.

மற்றவரின் வாழ்வைக் கண்டு பொறாமை கொள்ளேன். இறுமாப்பாயிரேன், அயோக்கியமானதைச் செய்யேன். தற்பொழிவை நாடேன். சினமடையேன், தீங்கு நினையேன், அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படுவேன்.

இத்தீர்மானத்தைக் கடவுள் என்னில் நிலை நிறுத்துவாரென்று உண்மையாய் விசுவாசிக்கிறேன். நான் முழு மனதோடு நம்புவதால் எனக்கு இம்மந்திரஞ் சித்தியாகும்.

அன்பு எனக்குள் குடிகொண்டிருப்பதால் எனக்குள் சந்தோஷமும் சமாதானமும் சகிப்பும் சாந்தமும் சீராய் நிலைநிற்கும்.

அன்பரனைவரின் அருள் ஆசியாகிய சக்தி எனக்குள் மின்சாரம்போல் பாய்ந்து பலன் தருவதால் நான் அன்பில் வளருகிறேன்.

தெய்வ ஆவி என்னுள் வந்து அன்பின்ரூபமாய் இறங்குகிறார். ஆதலால் நான் மகிழ்வேன். என் ஆயுள் வளரும்.

இரங்கூன் ரஞ்சிதபோதினி.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **ஹரிஹரத்தில் கால்நடைகளின் காட்சி.**—நாளது வருஷம் மார்ச்சு மாதத்தில் ஹரிஹர் என்னும் பட்டணத்தில் நடந்தேறின கால்நடைகளின் காட்சி இதுவரையில் மைசூர் இராஜ்யத்தில் நடத்தப்பட்ட காட்சிக ளெல்லாவற்றுள்ளும் சிறந்ததாயிருந்ததாம். அப்பட்டணம் பம்பாய் இராஜதானிக்கும் மைசூர் இராஜ்யத்திற்கும் எல்லையாயிருக்கிற துங்கபத்திரை நதியி னிருபுறத்திலு முள்ளது. அது ஹிந்துக்களுக்கு விசேஷமான ஸ்தலங்களி லொன்று. சென்ற வருஷம் முதற்கொண்டுதா னங்கே கால்நடைகளின் காட்சி நடத்த வாரம்பித்தார்கள். முதல் காட்சிக்கு 5,000 கால்நடைகள் கொண்டுவரப்பட்டன. இவ்வருஷம் கொண்டுவரப்பட்டவைகளின் தொகை 30,000. அதாவது போன வருஷத்தைக்காட்டிலும் ஆறுமடங்கதிகமாகக்கொண்டுவரப்பட்டன. அந்தக் காட்சியினால் மைசூர் ஜனங்கள்மாத்திரமே யன்றி தார்வாடா, விஜயபுரம் முதலிய ஜில்லாக்களி லுள்ளவர்களும் பிரயோசனமடைந்தார்கள். அப்பொழுது அங்கே கூடியிருந்த சுமார் 80,000 ஜனங்களுக்கு ம-௱-௱-ஸ்ரீ. கே. ராமய்யா அவர்கள் கரும்பின் விளைவு எருப்போடுதல் முதலிய வியவசாய விஷயங்களைப்பற்றியும், ம-௱-௱-ஸ்ரீ.

நரசிம்மய்யங்காரவர்கள் கால்நடைகளுக்கு வருகிற நோய்களைப்பற்றியும் அவைகளின் சிகிச்சைகளைப்பற்றியும் பிரசங்கங்கள் செய்தனர்.

---

2. **திருப்பூர் கால்நடைகளின் காட்சி.**— சென்ற ஜூன் மாதம் 12-ம்தேதியன்று திருப்பூரில் நடந்தேறின கால்நடைகளின் காட்சிக்கு முந்நூறு கால்நடைகளும் எழுபது நாட்டுக் குதிரைகளுங் கொண்டுவரப்பட்டன. காலை 8 மணிக்குக் கோயமுத்தூரிலிருந்து வந்திருந்த மிஸ்டர் எஸ். எல். டிஸில்வா என்னுந் துரையவர்களும், ம-ா-ா-ஸ்ரீ. வி. எஸ். நாராயணசுவாமி அய்யரவர்களும் பல விவசாய யந்திரங்களைக் கொண்டுவந்தவைகளின் பிரயோசனங்களைப்பற்றி அங்கு வந்திருந்த கிருஷிக்காரர்களுக் கெடுத்துரைத்தார்கள். பிறகு 10 மணிக்குமேல் ஜில்லா கலெக்டராகிய மிஸ்டர் எப். டபிள்யூ. கில்மென் துரையவர்கள் அக்கிராசனம் வகிக்க, கனம்பொருந்திய மிஸ்டர் ஏ. சாடர்டன் துரையவர்கள் நீரிறைக்கும் கருவிகளைப் பற்றியொரு பிரசங்கஞ் செய்தார். அந்தப் பிரசங்கத்தின் சாராம்சத்தை டிப்டி கலெக்டராகிய ம-ா-ா-ஸ்ரீ. யன். கோபாலசுவாமி அய்யங்காரவர்கள் குடிகளுக்கெல்லாந் தெரியும்படித் தமிழில் விளக்கிச் சொன்னபிறகு, கால்நடைகளையும் குதிரைகளையும் பரீட்சைசெய்து அவைகளில் உயர்ந்தவைகளைக் கொண்டுவந்தவர்களுக்கு வெகுமதிக ளளித்தார்கள்.

---

3. **சென்னை பஞ்சரப்போல்.** — சென்ற ஏப்பிரல் மாதத்தில் சென்னை பஞ்சரப்போலின் உபயோகார்த்தமாக அடியிற் குறிக்கப்பட்ட தொகைகள் நன்கொடையாக வளிக்கப்பட்டன.—மஹிமை பொருந்திய பொப்பிலி மஹாராஜா அவர்கள் ரூ. 100, கனம் பொருந்திய டப்ளியூ. பி. எயிலிங்கு ஜட்ஜியவர்கள் ரூ. 20, ம-ா-ா-ஸ்ரீ. ஜி. ரங்கய்யா அவர்கள் ரூ. 20, மிஸ்டர் எப். ஆர்மிடேஜ் துரையவர்கள் ரூ. 15, ம-ா-ா-ஸ்ரீ. ராம்லால் சாஹுகார் ரூ. 35; இதுதவிர ம-ா-ா-ஸ்ரீ. ஹிம்மத்துமல் சாஹுகார் என்பவர் 20 ரூபாய் பெறுமானமுள்ள பசும்புல்லைத் தானஞ்செய்தார். மெஸ்ஸர்ஸ் கிங்கு அண்டு கம்பெனியைச் சேர்ந்த ம-ா-ா-ஸ்ரீ. வி. இராமானுஜஞ் செட்டியாரவர்கள் ஏப்பிரல் மாசத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் பஞ்சரப்போலி லிருக்கிற கால்நடைகளுக்குக் கீரைகளையும் வாழைப்பழங்களையும் அளித்தார்.

---

4. **பக்ஷிகள் இறகுகளில் வியாபாரம்.**— அழகான தோகையுள்ள காட்டுப் பக்ஷிகளின் சர்மத்தையும் இறகுகளையும் இறக்குமதி செய்வதைத் தடுக்கும்பொருட்டு ஒரு சட்ட மேற்படுத்த வேண்டுமென்று ஹவுஸ் ஆப் காம்மன்ஸ் (House of Commons) என்னும் சட்ட நிரூபணச் சபையில் பெர்ஸி ஆல்டென் (Percy Alden) என்னும் துரையவர்கள் பேசினார். அந்தமாதிரி சட்ட மேற்படுத்தாவிட்டால் கொஞ்ச காலத்திற்குள் அபூர்வமான சில பறவை ராசிகளின் சந்ததியே யற்றுப்போகுமென்று அவர் எடுத்துரைத்தார். அச்சபையிலிருந்தவர்களில் பெரும்பாலார் அவர் சொன்னதற்கு இணங்கினார்கள். ஆனால் லண்டன் வர்த்தகச் சங்கத்தைச் சேர்ந்த (London Chamber of Commerce) செசவுக்காரர்கள் அதை மறுத்து, இறகு வியாபாரத்தை நிறுத்தவே கூடாதென்றும் இங்கிலாந்தில்மட்டும் நிறுத்தினால் என்ன பிரயோசனமென்றும் மற்ற பிரான்ஸு, ஸ்பெயின் முதலிய தேசத்தார் அவைகளை இறக்குமதி செய்துகொண்டுதா னிருப்பார்களென்றும் ஆகவே அந்த மாதிரி சட்டம் ஏற்படுத்தக் கூடாதென்றும் வாதித்தார்கள். அவர்கள் பக்கம் சேர்ந்த 48 பேர் போக மற்றவர்களெல்லாரும் சட்டத்தை யங்கீகரித்தார்கள்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1911.